**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்கள்.05/2025, 06/2025 மற்றும் 07/2025**

in

**அசல் வழக்கு எண்.62/2016**

1. விஸ்வநாதபிள்ளை (இறப்பு)
2. பாப்பா ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. பாஸ்கர் ராஜா
2. இசக்கியாடும் பெருமாள்
3. இசக்கிநாதன்
4. இசக்கியம்மாள் (இறப்பு)
5. சண்முகம்
6. சரஸ்வதி ... 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகள்
7. ராமலட்சுமி (எ) மல்லிகா
8. சந்திரசேகர் ...7, 8 எதிர்மனுதாரர்கள்/ உத்தேச 7, 8 பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 26.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 5, 6, 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத நிலையில் 2, 3, 5, 6, 8 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தால் 26.11.2025 அன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 4ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 7ம் எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றம் மூலம் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.12 17:39:54 +0530

ஆஜராகததால் 10.11.2025ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு Allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனுக்கள் மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுக்களானது காலவரையறைச் சட்டம் பிரிவு 5, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 9 மற்றும் கட்டளை 22 விதி 4 பிரிவு 151-ன் கீழ், இவ்வழக்கில் இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க குறிப்பிட்ட காலத்திற்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள 173 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மற்றும் அபேட்மெண்டை ரத்து செய்து, இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7, 8 எதிர்மனுதாரர்களை 7, 8 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்கள்.05/2025, 06/2025 மற்றும் 07/2025-ன் மனுக்களின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தர ஏவுகட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில், இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியான இசக்கியம்மாள் என்பவர் கடந்த 02.01.2025 தேதியில் 7, 8 எதிர்மனுதாரர்களை தனது அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துபோய் விட்டார் என்றும், மேற்படி இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7, 8 எதிர்மனுதாரர்களே, 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியின் எஸ்டேட்டுகளை அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில் மனுதாரருக்கு நீதிமன்ற

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.12 17:40:01 +0530

நடவடிக்கைகள் தெரியாததாலும், தனது வயோதிகத்தின் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய்விடுவதாலும், தனது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசு விபரங்களை கூறமுடியாமல் போய்விட்டது என்றும், அதனால் இவ்வழக்கில் இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு மனுதாரரால் குறித்த காலத்திற்குள் வாரிசு சேர்க்க தவறிவிட்டது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், ஆகையால், இவ்வழக்கில் இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க குறிப்பிட்ட காலத்திற்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள 173 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மற்றும் அபேட்மெண்டை ரத்து செய்து, இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7, 8 எதிர்மனுதாரர்களை 7, 8 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) இம்மனுக்களின் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் Allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுக்களானது மனுதாரர்களால், இவ்வழக்கில் இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்க்க குறிப்பிட்ட காலத்திற்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் ஏற்பட்டுள்ள 173 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மற்றும் அபேட்மெண்டை ரத்து செய்து, இறந்துபோன 4ம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.12 17:40:08 +0530

எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7, 8 எதிர்மனுதாரர்களை 7, 8 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில், மனுதாரருக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் தெரியாததாலும், தனது வயோதிகத்தின் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய்விடுவதாலும், தனது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசு விபரங்களை கூறமுடியாமல் போய்விட்டது என்றும், அதனால் இவ்வழக்கில் இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு மனுதாரரால் குறித்த காலத்திற்குள் வாரிசு சேர்க்க தவறிவிட்டது என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரர்களால் மனுக்களில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரர்களால் மனுக்களில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

8) இருப்பினும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 7, 8 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 7, 8 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும், மேலும் இம்மனுக்களுக்கு 1ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் Allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.12.12 17:40:15 +0530

**9) இறுதியாக**

**இ.ம.எண்.05/2025**

இம்மனுவானது ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 06.01.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 06.01.2026.

**இ.ம.எண்.06/2025**

இம்மனுவானது ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 06.01.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 06.01.2026.

**இ.ம.எண்.07/2025**

இம்மனுவானது ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 06.01.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 06.01.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.12 17:40:22 +0530

செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.12 17:40:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>–

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.12 17:40:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.05/2025
I.A.No.06/2025 and
I.A.No.07/2025
in
O.S.No.62/2016
உத்தரவு (Draft / Fair)
நாள் : 12.12.2025